# நற்செய்தியின் உண்மையினை நாம் எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?

இஸ்கந்தர் ஜதீத்

How can we know the Truth of the Gospel?

*by Iskander Jadeed*

Tamil Edition

9,000 copies

© All Rights Reserved.

For Private Circulation only

No part of this Publication may be translated, or transmitted on any form or by any means, electronic or mechanical, including photocopy, recording or any information storage and retrieval system without permission in writing from the author and publisher.

Published by
Markaz Ul Bisharah
Bangalore - 560 033

90 00/TL/MD/TR/APS/08/07

# நற்செய்தியின் உண்மையினை நாம் எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?

அன்பு நண்பரே!

நற்செய்தியைப் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்வதிலுள்ள உங்களுடைய ஆவல் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நல்லது, விசுவாசத்தில் வீரமுள்ள அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் 1 தெசலோனிக்கியேர் 5:21ல் "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என கூறியிருப்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

உங்களுடைய கடிதத்தின் துவக்கத்தில் கிறிஸ்தவ நம்பிக்கையைப் பற்றி என்னுடன் கலந்துரையாட வேண்டும் என்ற ஆவல் தெரிகிறது. இருப்பினும் உங்களுடைய ஆர்வமானது "மக்கள் புத்தகம்" என்ற வட்டத்தினுள்ளே உங்களை அழைத்துச் சென்றிருக்கிறது.

"நீங்கள் வேதத்தையுடையோர்களுடன் தர்க்கிக்க நேரிட்டால் அழகான முறையிலன்றி அவர்களுடன் தர்க்கிக்க வேண்டாம்" (29:46).

ஆனால் குர்ஆனில் சொல்லப்பட்ட எச்சரிக்கையின் வாசகத்தை மறந்திருக்கிறீர்கள்.

“எனினும், நபியே! இவர்கள் உம்மைத் தங்களுக்குத் தீர்ப்புக் கூறுவோராக, எவ்வாறு எடுத்துக் கொள்வார்கள்? இவர்களிடத்திலோ, ‘தவ்றாத்’ என்னும் வேதம் இருக்கின்றது” (5:43).

குர்ஆனின் கட்டளைக்கு மாறாக தீர்ப்பு வழங்குபவராக உம்மை அவர்கள் எவ்வாறு ஆக்குவார்கள்?

ஆகவே உணர்வுப் பூர்வமான கிறிஸ்தவ நம்பிக்கைகளை எதிர்ப்பதிலே நீங்கள் காட்டின முயற்சியில் பரிசுத்த பைபிளில் உள்ள குறிப்புகளை விட குர்ஆனில் உள்ள குறிப்புகளை அதிகமாகப் பயன்படுத்தியிருக்கிறீர்கள். கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையே ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் நீதிபதியாக குர்ஆன் விளங்குகிறது. இந்த உண்மைக்குரிய சிறந்த ஆதாரம் ‘மக்கள் புத்தகத்திலே’ முஹம்மது நபியையே குறிப்பிட்டு உறுதி செய்யப் பெற்றிருக்கிறது.

“நபியே நாம் உமக்கு அருட் செய்திருக்கும் இதில் சிறிதும் சந்தேகம் கொள்ளாதீர். நீர் சந்தேகித்தால், உமக்கு முன்னர் அருளப் பெற்ற வேதங்களை ஓதுவோரிடம் கேட்டுப்பாரும்” (10:94).

குர்ஆனைப் படிப்பவரான நீர் உமக்கு நாம் இறக்கியது குறித்து ஏதாவது ஐயத்திற்குள்ளானால் உமக்கு முன்னர் இந்த வேதத்தைப் படித்துக் கொண்டிருப்போரிடம் கேளும் (யூனுஸ் 10:94).

ஒவ்வொரு முஸ்லீமும் உபதேசத்தைப் பற்றிய

விவாதத்தை குர்ஆன் (மக்கள் புத்தகம்) மூலமாகத் தீர்த்துக் கொண்டு நியாயத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மேலே கூறப்பட்ட கட்டளை கூறுகிறது. இதன்படி குர்ஆனிலுள்ள இன்னொரு பகுதி –

"தவ்றாத் என்னும் வேதத்தையும், நிச்சயமாக நாம் தாம் இறக்கி வைத்தோம். அதில் நேர்வழியும், பிரகாசமும் இருக்கின்றது. அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபட்டு நடந்த நபிமார்கள், அதனைக் கொண்டே யூதர்களுக்கு மார்க்க கட்டளையிட்டு வந்தார்கள். அவர்களுடைய பண்டிதர்களாகிய ரிப்பிய்யூன்களும், குருமார்களாகிய "அஹ்பார்களும் (5:44) அல்லாஹ்வுடைய வேதத்தைக் காப்போர் என்ற முறையில், அதனைக் கொண்டே தீர்ப்பளித்து வந்தார்கள். அன்றி, இவர்கள் அதற்குச் சாட்சிகளாயும் இருந்தார்கள். எவர்கள் அல்லாஹ் அருளியவற்றைக் கொண்டு தீர்ப்பளிக்க வில்லையோ அவர்கள், நிச்சயமாக நிராகரிப்பவர்களே".

கிறிஸ்தவன் குர்ஆனில் கூறப்பட்டுள்ள எந்த உபதேசத்திற்கும் கட்டுப்பட்டவனல்ல அவனைப் பைபிளிலிருந்து பிரிக்க முடியாது என்றும் குர்ஆன் கருதுகிறது.

"நபியே அவர்களை நோக்கி, "வேதத்தையுடையவர்களே! நீங்கள் தவ்றாத்தையும், இன்ஜீலையும், உங்கள் இறைவனிடமிருந்து, உங்களுக்கு அருளப் பெற்ற மற்றவைகளையும் மெய்யாகவே நீங்கள் கடைப்பிடித் தொழுகும் வரை, நீங்கள் எதிலும் சேர்ந்தவர்களல்லர்" (5:68).

கிறிஸ்தவக் கொள்கைகளைப் பற்றிய உங்களது அனேக மறுப்புகளுக்குப் பதிலளிக்க விரும்புகிறேன்.

## I. கிறிஸ்துவின் குமாரத்துவம்

இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவத்தை எதிர்க்கும் முயற்சியில், குர்ஆனில் உள்ள ஸூரத்துல் இக்லாஸ், மர்யம் என்ற இரண்டு ஸூராக்களை பயன் படுத்தியிருக்கிறீர்கள். ஆனால் ஸூரத்துல் அன் ஆமிலுள்ள ஒரு வசனத்தைக் குறிப்பிடவில்லை. அது இவ்வாறு கூறுகின்றது.

“முன்மாதிரியின்றியே, வானங்களையும் பூமியையும் அவன் படைத்தான். அவனுக்கு எவ்வாறு சந்ததியேற்படும்? அவனுக்கு மனைவி கிடையாதே! யாவற்றையும் அவனே படைத்திருக்கின்றான். அன்றி அவன் யாவற்றையும் நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்”. (6:101)

கிறிஸ்துவினுடைய குமாரத்துவத்தை மறுக்கும் இஸ்லாமினுடைய விவாதத்தின் பலவீனமான அம்சத்தை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவே நான் இவ்வசனத்தைக் குறிப்பிட்டேன். புறசமயச் சூழலில் இருந்து வந்த சில கிறிஸ்தவர்கள், கன்னிமரியாள் ஒரு பெண் தெய்வம் என்ற வேதப்புரட்டுத்தனமான கருத்தை இஸ்லாம் சமய எழுச்சிக்கு முன்பு பரப்பினார்கள். “அல்–ஸ்ஹ்ரா” என்ற பெண் தெய்வத்தோடு கன்னிமரியாளை ஒப்பிட்டார்கள். இந்த வேதப்புரட்டர்கள் மரியாளைப் பின் பற்றுகின்றவர்கள் என்று தங்களைக் கூறிக் கொண்டார்கள்.

முஸ்லீம் அறிஞர் அஹ்மத் அல்—மக்ரீஸி (Ahmed Al-Makreezy) தன்னுடைய புத்தகமான அல்—கவ்ல்—அல் இப்ரீஸியில் இவர்களைக் குறிப்பிட்டுள்ளார். இது போன்று இன்னொரு எழுத்தாளர் இபின் ஹாஸ்ம் தன்னுடைய நூலான அல்—மிலல்—வல்—அஹ்வா—வல் நிஹல் (பக்கம் 47). இந்த வேதப்புரட்டர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இப்போது எந்த ஒரு கிறிஸ்தவனும் இதை நம்புகிறதில்லை உண்மையிலேயே மனிதத்துவப் பண்புகளுக்கு அப்பாற்பட்ட பரிசுத்த கடவுளின் மேன்மையை இது அவமதிப்பது என்று கிறிஸ்தவர்கள் கருதுகிறார்கள். இந்தக் கருத்து மறைகின்ற ஏழாம் நூற்றாண்டு வரை கிறிஸ்தவ இறையியலாளர்கள் வேத வசனங்களைக் கொண்டும் தர்க்கவாதங்களைக் கொண்டும் இந்தக் தவறை எதிர்த்துத் தீவிரமாகப் போராடினார்கள்.

மேற்குறிப்பிட்டதிலிருந்து குர்ஆன் கிறிஸ்தவக் கொள்கைகளை விமர்சிக்கவில்லை. ஆனால் கிறிஸ்தவரல்லாத பாரம்பரியத்திலிருந்து வந்த கன்னிமரியாளைப் பின்பற்றுகிற (மரியமைட்ஸ்) வேதப் புரட்டர்களைத்தான் விமர்சிக்கிறது என்று நமக்குத் தெரிகிறது. ஏனென்றால் எகிப்து, அரேபியா, கிரீஸ் போன்ற நாடுகளில் புறசமயக் கொள்கைகள் பரவலாகக் காணப்பட்டன. இப்புற சமயத்தார் தங்களுடைய கடவுள் திருமணமானவர்கள் என்றும். அவர்களுக்குக் குழந்தைகள் உண்டு என்றும் நம்பினார்கள். ஆகிலும் கிறிஸ்து பிறப்பானது மானிட சேர்க்கையினால் ஏற்பட்டதில்லை தெய்வீகப் படைப்பு என நம்புகிறார்கள். அவர் கடவுளின் வார்த்தையும்

அவருடைய பரிசுத்த ஆவியிலிருந்தும் வந்தவராயு மாயிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ் தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல் ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும், பரிசுத்தவான் களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது: நம்முடையப் பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சாமாதானமும் உண்டாவதாக. இயேசு கிறிஸ்துவைக் குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவனாவர் மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்றும் மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாய் இருக்கிறார். (ரோமர் 1:1–5)

இயேசு கிறிஸ்து கூறியதைச் சிந்தித்துப் பார்ப்போமானால் அவருடைய பிறப்பு தெய்வீகமானது என்ற உண்மை நமக்குத் தெளிவாகப் புலனாகும். இயேசு அவனை நோக்கி: “யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்”. (மத்தேயு 16:17)

என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்.... மத்தேயு 18:35 – அதற்கு அவர்: “நீங்கள் ஏன் என்னை தேடினீர்கள்? என் பிதாவுக்கு அடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார்.” (லூக்கா 2:49)

“இயேசு அவர்களை நோக்கி: என்பிதா இது வரைக்கும் கிரியை செய்து வருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன் என்றார்”. (யோவான் 5:17)

“இயேசு அவர்களை நோக்கி; நான் என் பிதாவினாலே அனேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன்; அவைகளில் எந்தக் கிரியையி னிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார்”. (யோவான் 10:32)

யோர்தான் நதியில் இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெறும்பொழுது வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டானதை சுவிசேஷமானது இவ்வாறு கூறுகிறது.

“அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது”. (மத்தேயு 3:17)

நாம் இப்போது குர்ஆனில் கூறப் பட்ட வாசகத்தையும் பார்ப்போம். “பிறந்தவருமல்ல – பிறப்பிக்கப்பட்டவருமல்ல.”

இமாம்–அல்–பைதாவி இதை இவ்வாறு விளக்குகிறார். “பிறந்தவருமல்லவென்றால் இவர்

மாம்ச இச்சையினால் பிறந்தவருமல்ல. இவருடைய பிறப்பிற்கு வேறு துணையாகக் கொண்டவருமில்லை. இவருக்குப் பின் இவரைப்போன்று யாரும் பிறக்கவுமில்லை. பிறப்பிக்கப்பிக்கபட்டவருமில்லையென்றால் அவருடைய பிறப்பிற்கு ஏதும் தேவையில்லை. பூரணத்துவம் அவருக்கு முன் சென்றது. ஆனால், ‘ஸுரத்துல் இக்லாஸ்’ பிறப்பைப் பற்றிக் கூறும் பொழுது இவ்வாறு அர்த்தம் கொள்ளவில்லை. பிறப்பை மானிட உறவினால் ஏற்பட்டதென்று கூறுகிறார். இதை நிச்சயமாகக் கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

## II - முஹம்மது நபி

முஸ்லிம்கள் மற்ற எல்லாத் தீர்க்கதரிசிகளையும் விட முஹம்மது நபி தான் முதன்மையானவர் என்று கருதுகிறார்கள்.

கிறிஸ்து ஒரு தீர்க்கதரிசி என்று மட்டுமே நீங்கள் கருதுவீர்களானால் யார் முதன்மையானவர் என்று நான் உங்களிடத்தில் விவாதித்து அறிந்து கொள்ளலாம். இருப்பினும் இயேசு கிறிஸ்து எல்லாத் தீர்க்கதரிசிகளையும், தேவ தூதர்களையும், பிரதான தூதர்களையும்விடச் சிறந்தவர் தான் என்பதில் ஐயமில்லை. “வானத்திலும், பூமியிலும் காணப்படுகிறவைகளிலும், காணப்படாதவைகளிலும் மேலானவர்தான்!!” ஆகையால் இதைப்பற்றி மேலும் விவாதிப்பதில் அர்த்தமில்லை.

யோவான் 1:1–5 வரை பார்ப்போமேயானால் ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை

தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலே யல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.

‘‘இப்படியிருக்க பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தது போல இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ள வராயிருக்கிறார். வீட்டை உண்டுபண்ணினவன் வீட்டைப் பார்க்கிலும் அதிக கனத்திற்குரிய வனாயிருக்கிறான். அதுபோல மோசேயைப் பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார். ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன். சொல்லப்படப் போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ள வராயிருக்கிறார். நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப்

பற்றிக் கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்.'' (எபிரேயர் 3:1–6)

''பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாகப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன். இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மை யுள்ளவரானார். எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன்; அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா? மேலும் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோதும் தேவதூதர் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள் என்றார்.'' (எபிரேயர் 1:1–6)

''தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்: கர்த்தர் என்னை நோக்கி, நீர் என்னுடைய குமாரன்; இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்.'' (சங்கீதம் 2:7)

“அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.” (கொலோசெயர் 1:15)

## III . நற்செய்திக்கு மாற்றாக வேறு

எந்த ஒரு வேதப்புத்தகமும் திருத்தி எழுதப்பட்டிருக்கிறது என்ற குற்றச் சாட்டிற்கு உள்ளாகலாம். ஆனால் ஆதாரங்களின்றி குற்றம் சுமத்துவதற்கும், ஆதாரத்தோடு குற்றம் சுமத்துவதற்கும் வேறுபாடு இருக்கிறது. இதற்குரிய முதல் சான்று புதிய ஏற்பாடு விவாகரத்தைத் தடுக்கிறது. குர் ஆன் விவாகரத்தை அனுமதிக்கிறது. குர்ஆன் திராட்சை ரசத்தைத் தடைசெய்கிறது. நற்செய்தி திராட்சை ரசத்தை அனுமதிக்கிறது.

இரண்டு காரணங்களினால் உண்மையிலேயே புரிந்து கொள்ளமுடியாது அடிப்படையில் மேலே குறிப்பிட்டவை பலவீனமான எதிர்ப்பாகத் தோன்றுகிறது.

1. நற்செய்தி விவாகரத்தைத் தடுக்கவில்லை. யூதர்களின் வேதம் தவறாக (Torah) விவாக ரத்து பற்றிய கட்டளையயை விளக்குகின்றது. யூத சட்ட வல்லுனர்களும் (Scribes) பரிசேயரும் பண்ணும் விவாதங்களைக் கட்டுப்படுத்துகின்றது.

ஒருவன் ஒரு ஸ்திரியை விவாகம் பண்ணிக் கொண்ட பின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்ற வனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள்

கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம், (உபாகமம் 24:1). வாழ்க்கை முழுவதும் கணவனும் மனைவியும் இணைந்து வாழவேண்டும் என்ற கடவுளின் ஆரம்ப காலக் கட்டளையை "இதினிமித்தம் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்" (ஆதி. 2:24). பின்பற்றும்படி இயேசு கிறிஸ்து மக்களைத் தூண்டுகிறார். இந்தக் கட்டளை குடும்ப நலம், பொது நீதி ஆகியவற்றைப் பேணிக்காக்கிறது. அத்தோடு மனைவி கணவனுக்குத் தாயாகவும், ஆன்மீகத் துணையாகவும் விளங்குகின்ற பெருமையைத் தருகிறது. கணவன், மனைவி இருவரில் யாராவது ஒருவரின் விபச்சாரச் செயலானது அவர்களது திருமண பந்தத்தைத் தளர்த்துகிறது. இக் காரணத்தினால் இயேசு கிறிஸ்து விவாகரத்தை அனுமதித்தார். "தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் தள்ளுதற் சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது" (மத்தேயு 5:31).

குடும்பம், நாடு இவற்றின் ஒழுக்க நெறியைப் பேணிக் காப்பாற்றுவதற்காக சில முஸ்லீம் சிந்தனையாளர்களும் தலைவர்களும் ஒழுங்கற்ற விவாகரத்தைத் தடை செய்வதற்குச் சட்டங்களைப் புகுத்தி வருவதை சமீப காலங்களில் பார்க்கிறோம். தீர்க்கதரிசன பாரம்பரியத்திற்கு பதிலளிக்கும் வகையில் இவைகளைச் செயல்படுத்துகிறார்கள். "கடவுள் அதிகமாக வெறுப்பது விவாகரத்து தான்" (சூனான் அபிதாவூத் புத்தகம் 13 பிரிவு 3).

2. நற்செய்தி மது அருந்துவதை ஆதரிக்கவில்லை, அதற்கு எதிராக எச்சரிப்பு விடுக்கிறது. "துன்மாக்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல் ஆவியினால் நிறைந்து" (எபேசியர் 5:18) அது மேலும் கூறுகிறது "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப் படாதிருங்கள். வேசிமார்க்கத்தாரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபச்சாரரும், சுய புணர்ச்சிக்காரரும், ஆண் புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரும், வெறியரும், உதாசீனரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை".

நற்செய்திக்கும் குர்ஆனுக்கும் சட்ட விஷயங்களில் வேறுபாடு நிலவுகிறது. இதனால் நற்செய்தியானது மாற்றி எழுதப்பட்டிருக்கிறது என்று நாம் தீர்ப்பு கூற இயலாது. குர்ஆன் சில காரணங்களினால் விவாகரத்தை அனுமதிக்கிறது. ஆனால் நற்செய்தியானது விவாகரத்தை அனுமதிக்கவில்லை. எனவே குர்ஆன் மாற்றி எழுதப்பட்டிருக்கின்றது என்ற கிறிஸ்தவர்கள் கூற்றை மறுப்பதற்கில்லை.

## IV . இயேசு கிறிஸ்து (ஈஸா நபி) சிலுவையில் அறையப்பட்டார்

இயேசு கிறிஸ்து (ஈஸா நபி) சிலுவையில் அறையப்பட்டார் என்பதை நற்செய்தி கூறுகிறது. குர்ஆன் அறையப்படவில்லை என்று கூறுகிறது.

யூதர்கள் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தார்கள் என்ற யூத தேசத்துச் சான்றுகளைப் பற்றி குர்ஆன் தெளிவாக விவரித்திருக்கிறதை மறந்து அநேக மக்கள் குர்ஆன் வாசகத்திலுள்ள எழுத்துக்களைப் பற்றிக் கொண்டிருப்பதைப் போன்று நீங்கள் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

“அன்றி, அல்லாஹ்வுடைய தூதர், மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹை, நிச்சயமாக நாம் சிலுவையில் அறைந்து கொலை செய்து விட்டோம்”.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட இந்தப் பெரும் நிகழ்ச்சிக்கு ஒரு சாட்சி மட்டுமல்ல கீழே கொடுக்கப்பட்டுள்ள வேறு சிலரது அறிக்கைகளும் உள்ளன.

## 1. தீர்க்க தரிசனங்கள்:

இது மறுக்க முடியாத ஒன்று, பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இயேசு சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட சூழ்நிலை சம்பந்தமான அனேக விளக்கங்களை எழுதத் தீர்க்கதரிசிகள் ஆவியினால் தூண்டப்பட்டார்கள்.

### A. முப்பது வெள்ளிக் காசுகளுக்கு கிறிஸ்து விற்கப்படுதல்:

“உங்கள் பார்வைக்கு நன்றாய்க் கண்டால், என் கூலியைத் தாருங்கள், இல்லாவிட்டால் இருக்கட்டும் என்று அவர்களோடே சொன்னேன். அப்பொழுது எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக் காசை நிறுத்தார்கள்”. (சகரியா 11:12)

**B. மண்பாண்டம் செய்பவன் வயலைப் பணம் கொடுத்து வாங்குதல்:**

"கர்த்தர் என்னை நோக்கி: அதைக் குயவனிடத்தில் எறிந்துவிடு என்றார்: நான் அந்த முப்பது வெள்ளிக்காசை எடுத்து. அவைகளைக் குயவனுக்கென்று கர்த்தருடைய ஆலயத்திலே எறிந்து விட்டேன்" (சகரியா 11:13).

**C. சிலுவையில் அறையப்படும் முன் கிறிஸ்து கேலி செய்யப்படுவதும், இழிவு செய்யப்படுவதும்:**

"நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது, பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துக் கொண்டது. என் கைகளையும், கால்களையும் உருவக் குத்தினார்கள். என் எலும்புகளை யெல்லாம் நான் எண்ணலாம். அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" (சங்கீதம் 22:16,17).

**D. அவர் ஏற்றுக்கொண்ட பயங்கரமான காயங்கள்:**

"நம்முடைய மீறுதல்களிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5).

**E. அவர் இகழப்படும்போது மவுனமாயிருந்தார்:**

"அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை: அடிக்கப்படும்படி கொண்டு

போகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.'' (ஏசாயா 53:7)

**F. அவர் வாரால் அடிக்கப்பட்டார், துப்பப்பட்டார்:**

''அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடை மயிரைப் பிடுங்கிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக் கொடுத்தேன். அவமானத்துக்கும் உமிழ் நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை''. (ஏசாயா 50:6)

**G. அவர்கள் அவரைக் கேலி செய்தார்கள்:**

''அனேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்து கொண்டது. பீறிக் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப் போல் என் மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்''. (சங்கீதம் 22:12,13)

**H. அவர்கள் அவரது ஆடைகளைப் பங்கிட்டு; தங்களுக்குள் சீட்டுப்போட்டார்கள்:**

''என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்''. (சங்கீதம் 22:18)

**I. பிதாவே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அவர் கேட்பது:**

''என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும் நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்''. (சங்கீதம் 22:1)

**J. அவருடைய விலாவிலே ஈட்டி பாயும்:**

“.... அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல் எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல் எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்”. (சகரியா 12:10)

**K. கள்ளர்கள் மத்தியிலே சிலுவையில் அறையப்பட்டு ஐசுவரியவானோடு இருந்தார்:**

“துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்களா. ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார். அவர் கொடுமை செய்யவில்லை. அவருடை வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை” (ஏசாயா 53:9).

**L. அவருடைய ஒரு எலும்பும் முறிக்கப் படவில்லை:**

“அவனுடைய எலும்புகளை எல்லாம் காப்பாற்றுகிறார். அவைகளில் ஒன்றும் முறிக்கப் படுவதில்லை”. (சங்கீதம் 34:20)

புதிய ஏற்பாட்டை நாம் வாசிக்கும்போது எழுத்து வடிவிலே கூறப்பட்ட தீர்க்க தரிசனங்கள் எல்லாம் நிறைவேறப்பட்டிருப்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

## 2. சிலுவையின் அடையாளம்

ஆதிக் கிறிஸ்தவர்கள் நெருக்கப்படுகையில் துன்பத்தின் அடையாளமாக சிலுவையை நினைத்தார்கள். ‘நீரோ’ என்ற ரோம அரசனுடைய

கொடுமையிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ளத் தாங்கள் கூடுகின்ற கல்லறைக் குகைகளிலே சிலுவையைப் பொறித்து வைத்தார்கள். ரோமாபுரிக்கு செல்பவர்கள் இன்னும் இதைக் காணலாம்.

### 3. இயேசுவின் சீடர்கள் அவருடைய பாடுகளைப் பிரசங்கித்தல்:

அவருடைய சீடர்களில் ஒருவரான பேதுரு யூதர்களைப் பார்த்து—

“இஸ்ரவேலரே நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள், நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும் தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக் காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினர், அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது”. (அப்போஸ்தலர் 2:22—24)

## 4. இயேசு கிறிஸ்து தன்னைப் பிரகடனப் படுத்துதல்:

மக்களுடைய பாவத்திலிருந்து மீட்கப்படுவதற்கு தான் சிலுவையில் அறையப்பட்டு மரணமடைவதை,

கிறிஸ்து அடிக்கடி கூறியிருப்பதை நற்செய்திகளை எழுதியவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

“இயேசு எருசலேமுக்குப் போகும்போது வழியிலே பன்னிரெண்டு சீஷரையும் தனியே அழைத்து. இதோ எருசலேமுக்குப் போகிறோம் மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும், வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார். அவர்கள் அவரைப் பரியாசம் பண்ணவும் வாரினால் அடிக்கவும் சிலுவையில் அறையவும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.” (மத்தேயு 20:17–19)

## 5. கிறிஸ்தவ மரபினுடைய மாறாத சாட்சிகள்:

கிறிஸ்தவ மார்க்கம் தோன்றியதிலிருந்து கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் கிறிஸ்துவினுடைய சரீரம் இரத்தத்தின் ஐக்கியம் என்று கூறப்படுகின்ற கடவுளின் கடைசி இரவு விருந்துக் கொண்டாடி வருகிறார்கள். அவர் காட்டிக் கொடுக்கப்படுகின்ற இரவிலே கிறிஸ்துவே இந்த உடன்படிக்கையை மேற்கொள்ளும்படி கட்டளையிட்டிருக்கிறார். அவர் தன்னுடைய மரணத்தை நினைவு கூறும்படி இதைச் செய்யச் சொன்னார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப்புசிப் பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி அவர் பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே

பங்கிட்டுக் கொள்ளுங்கள், தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சைப் பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார்". (லூக்கா 22:15–19)

மனித குலத்திற்காகத் தன்னை அர்ப்பணம் செய்து மனிதனுடைய பாவங்களைத் தன்னுடைய மரணத்தின் மூலம் ஈடுசெய்திருப்பதாக உறுதியாகக் கூறியிருக்கிறார். கிறிஸ்துவினுடைய சீடர்கள் ஆத்தும நன்மைக்காக வைபவத்தை ஆலயத்தில் (சாக்கிரமெந்து) நடத்தி வைக்கிறார்கள். இப்பொழுது இந்தச் சாக்கிரமெந்து உங்களிடம் கொடுக்கப்பட்ட அந்த இரவிலே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி "இது உங்களுக்காக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" இதே போன்று இரவு விருந்துக்குப் பின் இவ்வாறு கூறுகிறார். "இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாய் இருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்". (1 கொரிந்தியர் 11:23–25)

## 6. வரலாற்றுச் சான்று:

கிறிஸ்துவினுடைய மரணம் வரலாற்றிலும் எழுதி

வைக்கப்பட்டிருக்கிறது. வரலாற்று ஆசிரியர்கள் அனேக பக்கங்களில் தங்களுடைய குறிப்புகளில் இந்தப் பெரிய நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பிறகு உலகத்திலே வாழ்ந்த வரலாற்று ஆசிரியர்கள் சிலர்.

*** கி. பி. 55ல் வாழ்ந்த புற மதத்தைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர் டசிற்றஸ் (Tacitus).

*** கி. பி. 100ல் வாழ்ந்த கிரேக்க வரலாற்று ஆசிரியர் லூசியன் (Luchian).

*** ஜோஸ்ஃபஸ் (Josephus) என்ற யூத ஆசிரியர்.

இந்த வரலாற்று ஆசிரியர் எழுதிய வரலாற்றுக் குறிப்புகள் சுவிசேஷத்தில் குறிக்கப்பட்டிருந்த இயேசுவினுடைய பிறப்பு, உபதேசங்கள், சிலுவையில் அறையப்படுதல், உயிர்த்தெழுதல் போன்றவற்றை ஒத்திருக்கிறது.

## 7. **ரோம ஆவணங்களின் சான்று:**

பிலாத்து கிறிஸ்துவை சீஸர் தெபரியாவிடம் அனுப்பியது வரலாற்றுக் குறிப்பில் முக்கியமானதொன்றாகும். கிறிஸ்துவினுடைய செயல்களும் யூதர்கள் அவருக்கு விரோதமாகச் சாட்டின குற்றச்சாட்டும் கலகத்தை நிறுத்துவதற்கு மரணதண்டனை கொடுக்கப்பட்டு அவர் சிலுவையில் அறையப்படவேண்டும் என்ற அவசியமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கிறிஸ்தவ அறிஞர் டெரிட்டோலியனும் (Tertullian) இதைத் தெளிவாகக் குறித்திருக்கிறார்.

## 8. யூத தால்முட் கொடுக்கும் சான்று:

மோசேயினால் எழுதப்பட்ட “யூதர்களின் வேதத்தைப்” பின்பற்றியவர்கள் யூதர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். யூத மரபின் புத்தகமான “தால்முட்” பற்றி சிலர் அறிந்திருந்தார்கள். இந்தப் புத்தகம் முற்பிதாக்களின் பாரம்பரியத்தின் தொகுப்பாக விளங்குகிறது. அனேக சந்தர்ப்பங்களில் கடவுளின் கட்டளைக்கு இணையாக விளங்குகிறது. இயேசுவும் இந்த விஷயத்தில் அவர்களைக் கண்டிக்கிறார். “நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள். (மத்தேயு 15:3)

தால்மூட்டு புத்தகம் பக்கம் 42ல் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. பஸ்காவிற்கு முன்பு ஒருநாள் இயேசு சிலுவையில் அறையப்படுவார் அவர் கொல்லப் படுவார் என்று நாற்பது நாட்களுக்கு முன்பே சொல்லப்பட்டது. அவர் கொல்லப்படவேண்டும் ஏனென்றால் இயேசு ஒரு மந்திரவாதி. மேலும் இஸ்ரவேல் மக்களை வஞ்சித்து தவறான வழியில் நடத்துவதற்கு திட்டம் போட்டிருந்தார் என்று அது கூறுகிறது.

## 9. குர் ஆனின் சான்று:

குர் ஆனிலுள்ள அத்தியாயங்களில் குறைந்தது ஐந்து அத்தியாயமாவது இயேசு கிறிஸ்துவின் இறப்பை உறுதியளித்திருக்கிறது. மூன்று அத்தியாயங்களில் “இறப்பு” என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருகிறது.

அவையாவன:

“நான் பிறந்த நாளிலும், நான் மரிக்கும் நாளிலும் மறுமையில் நான் உயிர்பெற்றெழும் நாளிலும், சாந்தியும் சமாதானமும் என்மீது நிலைபெற்றிருக்கும்”. (19:33)

“ஈஸாவே நிச்சயமாக நான் உம்மை—உம்முடைய ஆயுளைப் பூர்த்திச் செய்வேன். உம்மை என்னளவில் உயர்த்திக் கொள்வேன். நிராகரிப்போரின் அவதூற்றிலிருந்து உம்மைப் பரிசுத்தமாக்கி வைப்பேன். உம்மைப் பின்பற்றுவோரை, நிராகரிப்போர் மீது மறுமை நாள் வரையில் மேலோக்கியும் வைப்பேன்”. (3:55)

“(அன்றி,) நீ எனக்கு ஏவிய பிரகாரமே..... நான் அவர்களுடன் இருந்தவரையில், அவர்களின் செயலை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். நீ என்னைக் கைப்பற்றிய பின்னர், நீ தான் அவர்களைக் கவனித்தவனாக இருந்தாய், எல்லாவற்றிக்கும் நீயே சாட்சி. (5:117)

இன்னும் இரண்டு அத்தியாயங்களில் “கொல்லப்படுதல்” என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

“மர்யமுடைய மகன் ஈஸாவுக்குத் தெளிவான அத்தாட்சிகளை கொடுத்து. ‘ஜிப்ரீல்’ என்னும் ‘பரிசுத்த ஆவியைக் கொண்டும் அவரைப் பலப்படுத்திவைத்தோம். ஆனால் உங்கள் மனம் விரும்பாத யாதொன்றையும் நம்முடைய எந்தத் தூதர் உங்களிடம் கொண்டு வந்தபோதிலும் நீங்கள் கர்வங் கொண்டு விலகிக் கொள்ளவில்லையா? அன்றியும்,

அத்தூதர்களில் சிலரை நீங்கள் பொய்யாக்கிச் சிலரைக்கொலை செய்தும் விட்டீர்கள்'' (2:87).

..... நபியே! நீர் கூறும்: "எனக்கு முன்னர் உங்களிடம் வந்த தூதர்கள், நீங்கள் கேட்ட இதனையும், வேறு பல தெளிவான அத்தாட்சிகளையும் கொண்டு வந்தார்கள். அவ்வாறிருக்க, மெய்யாகவே நீங்கள் உண்மை சொல்பவர்களாக இருந்தால், அவர்களை நீங்கள் ஏன் கொலை செய்தீர்கள்?'' (3:183).

## 10. கிறிஸ்துவின் உயிர்தெழுதல்:

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதற்குச் சரியான சான்று அவர் சிலுவையில் மரித்தது ஆகும். ஏனெனில் பரிசுத்த நற்செய்தி நூல் இவ்வாறு கூறுகிறது. "இவைகளுக்குப் பின்பு அரிமத்தியா ஊரானும், யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக் கொண்டு போகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான். பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் வந்து, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போனான். ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப் போளமும், கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு ராத்தல் கொண்டு வந்தான் அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து யூதர்கள் அடக்கம் பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள். அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டமும், அந்தத்

தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையும் இருந்தது. யூதருடைய ஆயத்த நாளானபடியினாலும் அந்தக் கல்லறை சமீபமாய் இருந்தபடியாலும் அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள்'' (யோவான் 19:38–42). ஆனால் மூன்றாவது நாள் விடிவதற்கு முன்பு ஒரு பெரிய பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. கடவுளுடைய தூதர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து கல்லறையின் முன்பு வைக்கப்பட்டிருந்த பெரிய கல்லை உருட்டித் தள்ளினார். பிலாத்துவினுடைய கட்டளையின்படி மூடி முத்திரை வைக்கப்பட்ட கல்லறையைக் காவல் காத்துக் கொண்டிருந்த காவலாளிகளை இந்த நிகழ்ச்சி பயமுறுத்தியது. இதைக் காவலர்கள் பார்க்க முடியாதபடி தேவ தூதனுடைய ஒளிமயமான உருவம் தடுத்திருக்கலாம். இருப்பினும் மகதலேனா மரியாளுக்கும் அவர்களோடு வந்தவர்களுக்கும் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று அதிகாலையிலே இறந்துபோன இயேசுவைப் பார்க்க வந்த அவர்களுக்கு இயேசு உயிர்த்தெழுந்தார் என்று தூதன் அறிவித்தான். ஆகையால் இயேசுவின் உயிர்த்தெழுதல் மறுக்க முடியாத நிரூபணம் ஆகும். சிலுவையில் அறையப்பட்டது, இயேசு கிறிஸ்து தான் என்பது உரிய நிரூபணம் ஆகும். ஏனென்றால் இயேசுவே யூதர்களைப் பார்த்து "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்கின்றார்.'' (யோவான் 2:19)

இதை மறுக்கின்ற ஒவ்வொருவரும் கிறிஸ்துவும் தேவதூதர்களும் இணைந்து மனித குலத்தை ஏமாற்றுகிறார்கள் என்று கடவுளைத் தான் குற்றம்

சுமத்துகிறவர்களாயிருக்கிறார்கள். இயேசுவை ஒழித்துக் கட்டவேண்டுமென்று யூதர்களுடைய நோக்கமானது கிறிஸ்தவம் பரவுவதைக் தடுப்பதே ஆகும். ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் யூதர்களின் குறுகிய மூடபக்தி நிறைந்த பாரம்பரியத்திற்கு முடிவு கட்டிவிடும் என்பதைக் கண்டு கொண்டார்கள். ஆகையால் ரோம அதிகாரிகளை வசப்படுத்தி இயேசுவைக் கொலை செய்து கல்லறையிலே வைக்கின்ற யூதர்களுடைய எண்ணம் நிறைவேறியபோது அவர்கள் நினைத்த காரியத்தை முடித்து விட்டோம் என்று கருதினார்கள். ஆனால் கடவுளுடைய சுவிசேஷத்தை சாத்தானுடைய சக்தியானது கட்டுப்படுத்த முடியாது. பூமியின் கடைசி முனைமட்டும் சுவிசேஷத்தை சாத்தானுடைய சக்தியானது கட்டுப்படுத்த முடியாது. பூமியின் கடைசி முனைமட்டும் சுவிசேஷம் பரவுவதைத் தடுக்கின்ற செயல் நீடிக்காது. இயேசுவின் சிலுவையினால் ஆயிரக்கணக்கான மக்கள் கவரப்பட்டார்கள். யூதர்களின் நோக்கம் நிறைவேறவில்லை. ஆனால் நிறைவேறியதாகக் கற்பனை பண்ணிக் கொண்டார்கள். இதை அறுநூறு ஆண்டுகளுக்குப் பின்பு வெளிவந்த குர்ஆனுடைய வார்த்தைகள் உறுதிப்படுத்துகிறது.

இயேசுவைப் பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் உண்மையிலே நடந்த காரியங்களைப் பற்றி நிச்சயம் கொண்டிருக்கவில்லை. அதற்கு மாறாக தாங்கள் அவரைப் பற்றி எண்ணிய எண்ணம்தான் உண்மை என்று நினைத்தார்கள். அவர்கள் இவ்வாறு எண்ணியதற்கு காரணம் என்னவென்றால் அவர்

மூன்று நாட்களுக்குப் பின் உயிர்த்தெழுந்தார். ஆகையால் அவர்கள் இயேசுவைக் கொல்லவில்லை என்பதாகும். இப்பெரும் நிகழ்ச்சியை குர்ஆனிலுள்ள வார்த்தைகள் உறுதிபடக் கூறுகின்றன.

“நான் பிறந்த நாளிலும், நான் மரிக்கும் நாளிலும், மறுமையில் நான் உயிர்பெற்றெழும் நாளிலும், சாந்தியும் சமாதானமும் என்மீது நிலைபெற்றிருக்கும்” **(19:33)** என்றும்.

“ஈஸாவே நிச்சயமாக நான் உம்மை உம்முடைய ஆயுளைப் பூர்த்தி செய்வேன். உம்மை என்னளவில் உயர்த்திக் கொள்வேன். நிராகரிப்போரின் அவதூற்றிலிருந்து உம்மை பரிசுத்தமாக்கிவைப்பேன். உம்மைப் பின்பற்றுவோரை, நிராகரிப்போர்மீது மறுமை நாள் வரையில் மேலோக்கியும் வைப்பேன்” **(3:55).**

உங்களுடைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த இஸ்லாம் மக்கள் மத்தியிலே பரவியிருக்கின்ற ஒரு கற்பனைக் கதையைப் பற்றி இபபொழுது நான் விளக்க விரும்புகிறேன். சுருங்கக் கூறினால் இயேசு கிறிஸ்துவிற்குப் பதிலாக இன்னொரு மனிதர் சிலுவையில் அறையப்பட்டார் என்பதே அக்கதையாகும். இயேசு கிறிஸ்து தன்னைப் பற்றிக் கூறிய அறிக்கைகளும் அவர் அவதரிப்பதற்கு முன்னால் தீர்ககதரிசிகள் கூறிய தீர்க்க தரிசனங்களும் இதை உறுதிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவிற்குப் பதிலாக சிலுவையில் அறையப்பட்டது இன்னொரு மனிதன் என்ற கதை ஒரு வெற்றி பெறமுடியாத கற்பனை மட்டுமல்ல மிகப்பரிதாபமான கட்டுக்கதை என்றும் சொல்ல ஆசைப்படுகிறேன். மிக

உயர்ந்த கண்ணியமுள்ள கடவுளை நியாயமற்றவர் ஏமாற்றுகின்றவர் என்று படம் பிடித்துக் காண்பித்ததுதான் இந்தக் கட்டுக்கதையின் மிக மோசமான தவறாகும்.

கிறிஸ்துவிற்கு பதிலாக வேறொரு நபர் நியமிக்கப்பட்டும் அந்த நபர் தன்னைப் பற்றி ஏதும் சொல்லாமல் இவ்வாறு மரித்தும் இருந்தால் இதைவிட மிகப் பெரும் அநீதி வேறு ஒன்றுமில்லை. உலகத்தில் மக்களுடைய பாவங்களை நீக்கி இரட்சிப்பதற்குக் கிறிஸ்து தன்னை ஏகபலியாகக் கொடுப்பதற்கு உலகில் அவதரிப்பார் என்று கடவுளால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள், தீர்க்கதரிசனங்களால் உரைத்தது போன்று மோசமான ஏமாற்று வேறு ஒன்றும் இருக்காது. எந்த ஒரு காரணமும் கூறாமல் மக்களைச் சந்தேகத்தில் தவிக்கவிடும்படி தனக்குப் பதிலாக வேறொருவரைச் சாக அனுமதிக்க எந்த நேரத்தில் தன்னுடைய திட்டங்களை மாற்றினார்?

இறப்பதற்கு முன்பு தவறுதலாகப் பலியிடப்பட்டிருந்த அந்த மனிதனின் ஈகைக்குரல் உலகம் முழுவதையும் நிரப்பியிருக்கும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? ஆம்! அறிவுள்ள எந்த மனிதனும் நிச்சயமாக நிராகரிக்கக் கூடிய அளவிற்கு இந்தக் கதை மிகவும் பலவீனமாயிருக்கிறது. இதனால் மரியாதைக்குரிய முஸ்லீம் ஞானிகள் இக்கதையை நிராகரித்திருக்கிறார்கள். இவர்களில் முக்கியமானவர்:

ஃ பாகிர்—எத்—தீன்—அல்—ராஸி ஆவார். இவர் இந்தக் கதையை முழுவதுமாக தீர ஆராய்ந்து இது

ஒரு கட்டுக்கதை அல்லது சிலரால் திரித்துக் கூறப்பட்டது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். ஸூரத்து அல் இம்ரான் 55ல் அவர் இதைப்பற்றி எடுத்துக் கூறியதை வாசியுங்கள்.

## V. வேத வாக்கியங்களை மாற்றுதல்:

உங்களுடைய கடிதத்தில் இவ்வாறு கூறியிருக்கிறீர்கள். நான் ஈஸாவை நம்புகிறேன். (சமாதானம் அவரோடு இருப்பதாக) அவர் தன்னை சிலுவையில் அறையப் போகிறார்கள் என்ற அவர்களுடைய சதியை அறிந்ததும் “உலகில் இப்புத்தகத்தை விட்டுச் சென்றார்” இவரைப் போல் தோற்றமுள்ள ஒருவர் சிலுவையில் அறையப் பட்டிருக்கும் போது இந்தப் புத்தகங்கள் எல்லாம் எரிக்கப்பட்டன. ஆகையால் தங்களால் கற்பனை செய்து கண்டுபிடிக்கப்பட்ட சம்பந்தமில்லாத சில காரியங்களைச் சேர்த்துக் கொண்டு தங்களுக்குத் தெரிந்த சிலவற்றை சிலபேர் திரும்பவும் எழுதினார்கள். ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்ட மிக அதிகமான சுவிசேஷங்களின் பெருக்கம் எவ்வாறு தோன்றியது என்பதை இது நமக்குத் தெளிவாக விளக்குகிறது. அதற்கு மாறாக குர்ஆன் பகுக்கப்படவோ அல்லது மாற்றப்படவோ இல்லை. இது போன்ற யூதர்களின் வேதபுத்தகம் “தவ்றாத்” மாற்றப்பட்டது. ஏனென்றால் இது மோசேயைத் தாக்குவதை நிறுத்திவிட்டது.

குர்ஆன் மாற்றப்பட்டிருக்கலாம் என்பதைப்பற்றி உங்களோடு வாதாட விரும்பவில்லை. அது என் வேலையுமில்லை. இருப்பினும் எந்தப் புத்தகங்கள்

முழுவதுமாக எரிக்கப்பட்டன என்பது பற்றி உங்களோடு விசாரிப்பது என்னுடைய அடிப்படை உரிமையாயிருக்கிறது (இன்ஜீல்) சுவிசேஷப் புத்தகங்களை நீங்கள் புரட்டுவீர்களானால், அவைகள் திரும்பவும் எழுதப்படாத காரணத்தால் புத்தகங்கள் எரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. தவ்றாத்தின்படி இந்தப் புத்தகங்கள் யூத ஆலயங்களிலும், கோயில்களிலும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருந்தது.

இயேசு கிறிஸ்து விட்டுச் சென்ற புத்தகத்தை எரிக்கின்றவர்கள் எரித்திருக்கவேண்டும் அல்லது அவர்கள் அந்தப் புத்தகத்தின் சில பகுதிகளை மாற்றி எழுதியிருக்கவேண்டும் என்று நீங்கள் எழுதியிருந்ததை நான் வாசிக்கும்போது எனக்கு ஒன்றும் புரியவில்லை. பகுத்தறிவுள்ள எந்த ஒரு முஸ்லீமும் நீங்கள் கூறிய இந்தக் கதையை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் சுவிசேஷத்தின் உண்மையை முஸ்லீம்களுடைய குர்ஆன் சாட்சி கொடுத்து இவ்வாறு கூறுகிறது.

“வேதத்தையுடையவர்களே! நீங்கள் தவ்றாத்தையும், இன்ஜீலையும், உங்கள் இறைவனிடமிருந்து, உங்களுக்கு அருளப் பெற்ற மற்றவைகளையும் மெய்யாகவே நீங்கள் கடைப் பிடித்தொழுகும்வரை, நீங்கள் எதிலும் சேர்ந்தவர்களல்லர்” **(5:68).**

ஆகவே, இன்ஜீலையுடையவர்கள், அதில் அல்லாஹ் அறிவித்திருக்கும் கட்டளைகளின் பிரகாரமே தீர்ப்பளிக்கவும் எவர்கள், அல்லாஹ்

அருளிய கட்டளைகளின் பிரகாரம் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள், நிச்சயமாகப் பாவிகள் தாம்! (5:47).

பரிசுத்த பைபிளில் எழுதியிருக்கிறபடி (ஸூரா 42:15) மேலே கூறிய வசனங்களை முஹம்மதுவின் குறிப்புக்களோடு இணைத்து நாம் நம்புவோமேயானால் உங்களைக் குழப்புகின்ற ஒரு கேள்வியை எதிர்நோக்க வேண்டியதிருக்கும்.

“......அல்லாஹ் வேதமென்று எதனை இறக்கிவைத்தானோ அதனையே, நான் விசுவாசிக்கின்றேன்......” (42:15).

இயேசு கிறிஸ்து பரத்துக்கேறின நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பு கடவுள் முகம்மது நபியை அழைத்து குறைவுள்ள புத்தகத்தை நம்பவேண்டும் என்று கூறியது சரியாகுமா?

ஒவ்வொரு தலைமுறை முஸ்லீம்களும் குர்ஆனால் பரிசுத்த பைபிளை நம்புவதற்கு இணைக்கப் பட்டிருக்கின்றனர். ஏனெனில் குர்ஆன் கூறுகின்றது.

“விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அவன் தன்னுடைய இத்தூதர் மீது அருளிய இவ்வேதத்தையும், இதற்கு முன்னர் அவன் அருளிய வேதங்களையும் விசுவாசியுங்கள், எவன் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அவன் தன்னுடைய இத்தூதர் மீது அருளிய இவ்வேதத்தையும், இதற்கு முன்னர் அவர் அருளிய வேதங்களையும் விசுவாசியுங்கள். எவன்

அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் நிராகரிக்கின்றானோ அவன் நிச்சயமாக வெகு தூரமான வழி கேட்டில் தான் செல்லுகின்றான்". (4:136)

"விசுவாசிகளே! நூஹ்வுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கி இருக்கின்றான். ஆகவே, (நபியே!) நாம் உமக்கு வஹீமூலம் அறிவிப்பதும், இப்ராஹீம், மூஸா, ஈஸா ஆகியோருக்கு நாம் உபதேசித்ததும் என்னவென்றால், "நீங்கள் ஒருமித்து ஏகதெய்வக் கொள்கையுடைய உண்மையான மார்க்கத்தை நிலையாகக் கைக்கொள்ளுங்கள்". (42:13)

நாம் குர்ஆனை ஆழ்ந்துபடித்து ஆராய்வோமேயானால் அதிலுள்ள சில பக்கங்களில் யூதருடைய வேதத்தையும் (தவ்ராத்) சுவிசேஷத்தைப் பற்றிய உண்மையயும் அனேக சாட்சிகள் மாத்திரமல்ல தன்னுடைய வார்த்தை அழிக்கப்படக் கூடாது. மாற்றப்பட கூடாது என்பது பற்றியும் இறைவன் கூறிய அநேக வாக்குத்தத்தங்களைக் காணலாம் அவைகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

"நிச்சயமாக நாம் தாம் இவ்வேதத்தை உம் மீது இறக்கிவைத்தோம். ஆகவே, அதில் எத்தகைய மாறுதலும் அழிவும் ஏற்படாதவாறு நிச்சயமாக நாமே அதனை இரட்சித்துக் கொள்வோம்". (15:9)

"அல்லாஹ் ஏற்படுத்திய வழி இதற்குமுன் சென்றவர்களுக்கும் இதுதான். ஆகவே நபியே நீர்

அல்லாஹ்வுடைய வழியில் யாதொரு மாறுதலையும் காணமாட்டீர்’’. (33:62)

‘‘உமக்கு முன்னிருந்த நம்முடைய தூதர்கள் பலரும், இவ்வாறு பொய்யரெனவே கூறப்பட்டனர். அவர்களுக்கு நம்முடைய உதவி வரும் வரையில், அவர்கள் பொய்யரெனத் துன்புறத்தப்பட்டதை அவர்கள் உறுதியோடு பொறுத்துக் கொண்டிருந்தனர். அல்லாஹ்வுடைய வாக்குகளை எவராலும் மாற்ற முடியாது’’. (6:34)

கடவுளுடைய வார்த்தையானது மாற்றப் பட்டிருக்கிறது என்று சொல்வது – அந்த வார்த்தை பாதுகாக்கப்படுகிறது என்று குர்ஆனிலே எழுதப்பட்ட அவருடைய வாக்குத்தத்தங்கள் தோல்வி யடைந்திருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வதாகப் பொருள்படும். கடவுள் உண்மையுள்ளவர், நேர்மை யுள்ளவர், அவருடைய வார்த்தையைக் காக்கிறவர். ஆகையால் கடவுளுடைய வார்த்தை மாற்றப்பட்டிருக்கிறது என்பது கூடாத காரியம். உண்மையிலும், தூய்மையிலும் கடவுள் நிலைத்திருப்பதால் கடவுளுடைய வார்த்தை மாற்றப்படவில்லை என்பது விஷேசித்த உண்மையாகும். இறுதியாகக் குர்ஆன் இவ்வாறு சொல்லும்பொழுது இனிய நண்பரே உங்களால் குர் ஆனைப் புரிந்து கொள்ள முடிகிறதா?

ஆகவே, (நபியே) அவர்களை நோக்கி, ‘‘நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இவ்விரண்டையும் விட நேரான வழியை அறிவிக்கக்கூடிய மிக்க மேலானதொரு வேதத்தை அல்லாஹ்விடமிருந்து

நீங்கள் கொண்டு வாருங்கள்; நானும் அதைப் பின்பற்றலாம்". **(28:49)**

வேத வாக்கியங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன என்று குற்றம் சாட்டுகிறவர்கள் எப்பொழுது வேதவாக்கியங்கள் மாற்றப்பட்டன என்ற கேள்வியை இப்பொழுது என்னால் கேட்காமல் இருக்க முடியாது. இஸ்லாம் சமயம் தோன்றுவதற்கு முன்பு வேத வாக்கியங்கள் மாற்றப்பட்டன என்றால் பரிசுத்த வேதாகமத்திலே கூறப்பட்டுள்ளவைகளில் எல்லாம் உண்மை என்று குர்ஆன் ஏன் பைபிளைச் சாட்சியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்? இஸ்லாம் மார்க்கம் தோன்றுவதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே பரிசுத்த பைபிளின் பழங்காலக் கைபிரதிகளானது அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டிருந்ததால் இஸ்லாம் மார்க்கம் பரவிய பின்பு தான் பைபிளின் வாக்கியங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, என்ற குற்றச்சாட்டும் செல்லுபடியாகாமல் போய்விடுகிறது. முன்பு உள்ள பைபிளின் கைபிரதிகளிலுள்ள மூலவாக்கியங்களானது இப்பொழுது நடை முறையிலுள்ள பைபிளின் மூல வாக்கியங்களிலிருந்து எந்த வகையிலும் வேறுபட்டிருக்கவில்லை. இது சம்பந்தமாக விலையேறப் பெற்ற வேத வாக்கியங்களானது மனிதனுடைய வழிநடத்து தலுக்காகவும், இரக்கத்திற்காகவும் கடவுளால் அனுப்பப்பட்ட உண்மை என்று சாட்சி கொடுத்த குர்ஆன் அதன்பின்பு இவைகள் மாற்றி எழுதப்பட்டிருக்கின்றன என்று கூறுவது நியாயம்தானா?

நடைமுறையில் மாற்றி எழுதப்பட்ட நிகழ்ச்சி நடை பெற்றிருக்குமானால் இந்தப் புத்தகத்தின் பாதுகாவலனாக கொடுக்கப்பட்ட அந்த வேளையிலே குர்ஆன் தோல்வியடைந்து விட்டது என்று தான் பொருள் கொள்ள வேண்டியதிருக்கிறது.

ஏனெனில் குர்ஆனிலே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

“(நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தையும், நாம் தாம் உம்மீது அருளினோம், இது தனக்கு முன்னுள்ள மற்ற வேதங்களையும், உண்மையாக்கி வைக்கின்றது. அன்றி, அவைகளைப் பாதுகாப்பதாகவுமிருக்கின்றது. ஆகவே, நபியே! நீர் அல்லாஹ் உமக்கு அருளிய இதனைக் கொண்டே அவர்களுக்கிடையில் தீர்ப்பளியும்”. (5:48)

இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் இறுதியான கேள்வி ஒன்றிருக்கிறது. பொருத்தமான காரணங்களால் தான் யூதர்களின் வேத புத்தகம் (தவ்றாத்) மாற்றி எழுதப்பட்டது என்று அப்பிரச்சனைக்கு முடிவு கண்ட அவர்களின் நிலை என்ன? இயேசு கிறிஸ்துவிற்கு முந்திய காலத்திலே யூதர்கள் மாற்றி எழுதியிருக்கிறார்கள் என்பது பகுத்தறிவில்லாததாகும். மற்றபடி கிறிஸ்து வேத புத்தகத்தைச் சாட்சியாக எடுத்து அதிலிருந்து மேற்கோள்காட்டி எதுவும் கூறியிருக்கமாட்டார். இதற்கு இணையான பகுத்தறிவில்லாத கூற்று என்னவென்றால் இயேசு கிறிஸ்துவுக்குப் பின்பு இவைகள் மாற்றி எழுதப்பட்டன என்பதாகும். ஏனென்றால் அவ்வாறிருந்தால் கிறிஸ்துவிடமிருந்து

மிகப் பெரிய எதிர்ப்பை இது சந்திக்க வேண்டியது வந்திருக்கும். உண்மையிலேயே யூதர்களோ, கிறிஸ்தவர்களோ வேத புத்தகத்திலுள்ளவைகளை மாற்றுவதற்கு சம்மதிப்பது என்பது முடியாத ஒன்றாகும். முதலாவது யூதர்களும், கிறிஸ்தவர்களும் ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு கொண்டு மோதுகிறார்கள். இரண்டாவது அனேக மொழிகளில் உலகம் முழுவதும் பரிசுத்த வேதாகமமானது பரவியிருக்கிறது. மூல கருத்துக்களை மாசு படுத்துவதற்காக எண்ணி முடியாத வேதாகமத்தின் பிரதிகளை சேகரித்தார்கள் என்பது முடியாத ஒன்றாகும்.

## VI. பல சுவிசேஷங்கள்

ஒன்றுக்கு மேற்பட்ட சுவிசேஷங்களும் நிருபங்களும் இருப்பதாவது, மேலும் சவிசேஷங்கள், நிருபங்கள் ஆகியவைகளில் உள்ள சாராம்சமானது மாற்றப்பட்டிருக்கின்றது என்பது நிரூபணமாகி யிருக்கிறது என்ற கூற்றானது வருந்தத்தக்கதாகும். புதிய ஏற்பாடானாது நான்கு சுவிசேஷங்கள், நிருபங்கள், வெளிப்படுத்துதல், அப்போஸ்தல நடபடிகள் ஆகியவைகளடங்கியதாகும் என்பதை நீங்கள் உணரவில்லை என்று தெரிகிறது. ஆகையால் புதிய ஏற்பாட்டில் பல சுவிசேஷங்களும், நிருபங்களும் இருப்பதால் சுவிசேஷமானது மாற்றி எழுதப்பட்டுள்ளது என்று பொருள் கொள்ள முடியாது. ஏனென்றால் 114 ஸூராக்களும் இருப்பதினால் குர்ஆனும் மாற்றப்பட்டது என்று பொருள் கொள்ள முடியாததற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

**ஒவ்வொரு கேள்விக்கும் விடை:**

இந்தப் புத்தகத்திலே மொழியாக்கமாய் வெளிவந்திருப்பது நீங்கள் விரும்பிய விளக்கத்தைக் கொடுக்காவிடில் அல்லது கடவுளுடைய வார்த்தை சம்பந்தமாக ஏதாவது சந்தேகமான கேள்விகள் இருந்தாலோ எங்களுக்கு எழுதுங்கள். உங்கள் மனதிலோ, உங்கள் உள்ளத்திலோ எழும் ஐயங்களுக்கு நாங்கள் அன்போடு பதில் அளிக்கத் தயாராகயிருக்கிறோம். உங்கள் கேள்விகளை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## *வினா*

**சுவிஷேத்தின் உண்மையை நாம் அறிவது எப்படி?**

*அன்புள்ள வாசகரே!*

27 வினாக்களுக்குச் சரியாகப் பதில் அளிப்பீர்களேயானால் எங்களது மற்றொரு பிரதியை உங்களுக்கு நாங்கள் அனுப்பி வைப்போம்.

1. ஸூரத்து யூனுஸ் 10:94 வாக்கியத்தில் உள்ளதைப் பற்றி நீங்கள் விளங்கிக் கொண்டது என்ன?

2. மரியமைட்டின் வேதப்புரட்டலைக் குர்ஆன் குறை கூறியதா?

3. வைதீக கிறிஸ்தவம் மரியமைட்டின் வேதப்புரட்டலை ஏற்றுக் கொள்கிறதா அல்லது மறுக்கிறதா?

4. கிறிஸ்தவர்களையோ அல்லது

மரியமைட்களையோ குறை கூறித் தாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு குர்ஆன் ஆனது அவிசுவாசம் பல தெய்வ வழிபாட்டைக் குறை கூறுகிறதா?

5. கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற கிறிஸ்தவர்களுக்கும், மரியமைட்ஸ்களுக்கும் உள்ள நம்பிக்கைகளை வேறு படுத்திக் காட்டவும்.

6. கிறிஸ்துவை “கடவுளின் மைந்தன்” எனக் கிறிஸ்தவர்கள் எதன் அடிப்படையில் கூறுகிறார்கள் என்பதை விளக்கவும்.

7. ஸூரத்துல் இக்லாஸ் (112) எந்த வகையான பிறப்பைப் பற்றிக் கூறுகிறது.

8. தெய்வீக குமாரத்துவத்தை உறுதிப் படுத்துகின்ற இயேசுவின் அறிக்கைகளைக் கூறவும்

9. இயேசு முழுமையான ஒரு தீர்க்கதரிசியா? அவரை மற்றவர்களோடு நாம் ஒப்பிடுவது சரியா?

10. எபிரேயர் 1:1–6, சங்கீதம் 2:7 படித்த நீங்கள் புரிந்தவற்றைச் சுருக்கமாக எழுதவும்.

11. சுவிசேஷத்தில் விவாகரத்து சம்பந்தமான கட்டளைக்கு கிறிஸ்து என்ன விளக்கம் கொடுத்தார்?

12. எந்த சூழ்நிலையில் கிறிஸ்து விவாகரத்தை அனுமதித்தார்?

13. மயக்கமூட்டும் மதுபானங்கள் சம்பந்தமாக சுவிசேஷத்தில் கூறப்பட்ட போதனை என்ன?

14. குர்ஆனிலும் சுவிசேஷத்திமுலுள்ள கருத்துவேறுபாடுகளானது இவ்விரண்டில் ஒன்று அல்லது இரண்டும் மாற்றப்பட்டிருக்கிறது என்று நமக்குக் கேட்கத் தோன்றுகிறதா?

15. குர் ஆனிலும் கூறப்படுகின்ற கிறிஸ்து சிலுவையில் அறையுண்டது சம்பந்தமாக உள்ள யூத சான்றுகள் என்ன?

16. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதற்கு யூதருடைய சான்றுகள் மட்டும் தான் உள்ளதா?

17. கிறிஸ்துவின் மரணத்திற்குத் தொடர்புடைய சில தீர்க்கதரிசனங்களைக் குறிப்பிடுக.

18. ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று காட்டிக் கொள்ள என்ன அடையாளம் கொண்டிருந்தார்கள்?

19. அப்போஸ்தலர் 2:22–24ல் அடங்கியுள்ள பொருள் என்ன?

20. கிறிஸ்து உயிரோடிருந்த நாட்களில் அவர் சிலுவையில் அறையப்படுவார் என்றும் எங்கே அறையப்படுவார் என்றும் சொன்னாரா?

21. கிறிஸ்து மரிப்பது, உயிர்த்தெழுவது மீண்டும் திரும்ப வருவது ஆகியவற்றை எடுத்துக் காட்டுவதற்கு கிறிஸ்தவர்கள் அனுசரிக்கின்ற சடங்காச்சாரம் என்ன?

22. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது

சம்பந்தமாக கூறப்படுகின்ற சுவிசேஷங்களுக்கு ஆதரவாக வரலாற்றில் ஏதேனும் கூறப்பட்டுள்ளதா?

23. யூதர்களுடைய இரண்டாவது புத்தகத்தின் பெயர் என்ன?

24. கிறிஸ்துவின் மரணத்திற்கு ஆதாரமாகக் குர்ஆனில் கூறப்பட்டுள்ள குறிப்புகள் எத்தனை?

25. கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்பதற்கு உறுதியான ஆதாரம் என்ன?

26. கிறிஸ்து சிலுயையில் தொங்கியபோது பிலாத்துவிடம் கிறிஸ்துவின் உடலைக் கேட்டவர் யார்?

27. கிறிஸ்து மரித்த மூன்று நாளைக்குப் பின் என்ன நடந்தது?

28. அவருடைய (கிறிஸ்துவின்) சாயல் உள்ளவரோ அல்லது மாற்று மனிதன் ஒருவரோ கிறிஸ்துவிற்குப் பதிலாக சிலுவையிலறைப்பட்டார் என்று கூறப்படுகிற கதையை மறுத்த இஸ்லாம் ஞானி யார்?

29. அவருடைய காயங்கள் அவர்களுக்கு காண்பிக்கப்பட்டது என்ற கூற்றிலிருந்து அறிவது என்ன?

30. சுவிசேஷத்தில் கூறப்படுகிற உண்மைக்கு குர்ஆன் சாட்சி பகர்கின்றதா?

31. மக்கள் புத்தகத்திலே உள்ள சட்டங்களை (பிரமாணங்களை) யும் மற்றவைகளையும் நிலைநாட்ட

குர்ஆன் அதற்கு அழைப்பு விடுக்கிறதா?

32. முஹம்மது நபியும் அவருடைய தேசமும் பரிசுத்த பைபிளை நம்புவதற்கு அழைக்கப்பட்டனரா?

33. ஸூரத்துல் கஸஸ் 49ஐ எப்படி புரிந்து கொள்கிறீர்கள்?

34. பைபிள் மாற்றப்பட்டது என்ற கூற்றிலே நீடித்து இருந்தால் குர்ஆனால் நிலைத்திருக்க முடியுமா?

35. பைபிளை மாற்றி எழுதுவதற்கு உலகில் ஒவ்வொரு மூலையிலுள்ள பைபிளுடைய பிரதிகளை சேகரிப்பது என்பது முடியக் கூடியதா?

36. புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ளது என்ன?

இதற்குரிய பதில்களை உங்களுடைய முகவரியைத் தெளிவாக எழுதி கீழே உள்ள எங்களது முகவரிக்கு அனுப்புங்கள்.


**NURUL - HAYATH**
P. O. Box No. 609,
TRICHY - 620 004

**நூரூல் ஹயாத்**
தபால் பெட்டி எண். 609
திருச்சி – 620004

குர்ஆன் அதற்கு அழைப்பு விடுக்கிறதா?

**32.** முஹம்மது நபியும் அவருடைய தேசமும் பரிசுத்த பைபிளை நம்புவதற்கு அழைக்கப்பட்டனரா?

**33.** ஸூரத்துல் கஸஸ் 49ஐ எப்படி புரிந்து கொள்கிறீர்கள்?

**34.** பைபிள் மாற்றப்பட்டது என்ற கூற்றிலே நீடித்து இருந்தால் குர்ஆனால் நிலைத்திருக்க முடியுமா?

**35.** பைபிளை மாற்றி எழுதுவதற்கு உலகில் ஒவ்வொரு மூலையிலுள்ள பைபிளுடைய பிரதிகளை சேகரிப்பது என்பது முடியக் கூடியதா?

**36.** புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ளது என்ன?

இதற்குரிய பதில்களை உங்களுடைய முகவரியைத் தெளிவாக எழுதி கீழே உள்ள எங்களது முகவரிக்கு அனுப்புங்கள்.

---


**JEEVA OLI** **ஜீவ – ஒளி**

P. O. Box No. 551, த. பெ. எண். 551

TIRUNELVELI - 627010 திருநெல்வேலி – 627010


---

குர்ஆன் அதற்கு அழைப்பு விடுக்கிறதா?

**32.** முஹம்மது நபியும் அவருடைய தேசமும் பரிசுத்த பைபிளை நம்புவதற்கு அழைக்கப்பட்டனரா?

**33.** ஸூரத்துல் கஸஸ் 49ஐ எப்படி புரிந்து கொள்கிறீர்கள்?

**34.** பைபிள் மாற்றப்பட்டது என்ற கூற்றிலே நீடித்து இருந்தால் குர்ஆனால் நிலைத்திருக்க முடியுமா?

**35.** பைபிளை மாற்றி எழுதுவதற்கு உலகில் ஒவ்வொரு மூலையிலுள்ள பைபிளுடைய பிரதிகளை சேகரிப்பது என்பது முடியக் கூடியதா?

**36.** புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ளது என்ன?

இதற்குரிய பதில்களை உங்களுடைய முகவரியைத் தெளிவாக எழுதி கீழே உள்ள எங்களது முகவரிக்கு அனுப்புங்கள்.


**THARIQ-UL-HAYATH** **தாரீஹ்—உல்—ஹயாத்**

P. O. Box No. 18, த. பெ. எண். 18

MADURAI - 625 006 மதுரை – 625 006